# அலகு - 5 சீறாப்புராணம்

## கதீஜா கனவு கண்ட படலம்

சீறாப்புராணம் - உமறுப்புலவர் எழுதியது. விருத்தப்பாவினால் ஆனது. இறைதூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை தமிழ் மரபு மாறாமல் எழுதியுள்ளார். இதன் காலம் கி.பி. 18 வள்ளல் சீதக்காதியை பல இடங்களில் புகழ்ந்து எழுதியுள்ளார். இரண்டு பாகங்களை உடையது. முதல் காண்டம் இரண்டு காண்டங்களையும், 23 படலங்களையும் கொண்டுள்ளது. இரண்டாவது காண்டம் 21 படலங்களைக் கொண்டுள்ளது. உமறுப்புலவர் சீதக்காதி வேண்ட இந்நூலை இயற்றியுள்ளார். சீறாப்புராணம் என்றால் 'புனிதக்கதை' என்பது பொருள். நபிகள் தனது 40வது வயதில் இறைத்தூதராக மாறுகிறார். நபிகளின் இறைகொள்கையை முதலில் யாரும் ஏற்றுக் கொள்ள வில்லை. பொதுமக்களின் பல்வேறான கேள்விகளுக்கு ஆளானவர் தனது 52 வயதில் மக்காவிலிருந்து மதீனாவுக்கு பயணம் மேற்கொள்கிறார். அவருடன் சில வியாபாரிகளும் வருகின்றனர். மதீனாவில் கதீஜா என்ற அம்மையார் நபிகள் நாயகத்தின் இறை கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அவரை மணந்து கொள்ள விரும்புகிறார். இவர் ஏற்கனவே திருமணமாகி விதவை ஆனவர். தனது 40 வது வயதில் அவ்விதி திருமணம் செய்து கொள்கின்றார்.

திருமணத்திற்கு முன்பு, மதீனா நோக்கி வந்து கொண்டிருந்த நபிகள் நாயகத்தை எண்ணிய கதீஜா நேரில் தன் இல்லத்திற்கே வந்துவிட்டதாக நினைத்துக் கனவு காணுகின்றார்.

நபிகள் நாயகம் வருகை:-

நபி, தனது நண்பர்கள், வியாபாரிகளுடன் உஸ்வா எனும் பண்டிதன் தங்கியிருக்கும் எல்லையைக்

கடந்து பல்வேறு வகையான மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைகள், நீர்த்தடாகங்கள் வழியே கடந்து வருகின்றனர். கொவ்வைக்கனி படர்ந்திருக்கும் முல்லைநில வழியே இடையர்கள் மத்தினால் தயிர் கடைந்து கொண்டிருக்கும் முல்லைநில ஊர்களைக் கடந்து செல்கின்றனர்.

நளனோடு வரும் ஏவலாளிகள் வரும் வழியில் குதிரைக்கூட்டங்களும், வாத்தியங்களின் ஒலியும், எருதுகள் கழுத்தில் கட்டியிருக்கும் மணிகளின் ஒலியும், வெண்கொற்றக் குடையும், கொடியும் அதிகரிக்க நடந்து செல்கின்றனர்.

தாழை, பேரீச்சம், கமுகு, தென்னை மரங்கள் நிறைந்துள்ள இடங்கள் வழியாகவும், நெல்லி, நாவல், மாமரங்கள், எலுமிச்சை, கொளுஞ்சிக்கனிகள் கனிந்து காணப்பட்ட அவ்விடங்களை எல்லாம் கடந்து வந்தார்.

நளன் நாயகத்தின் வரவால் நீர்த்தடாகங்களும், மலர்ச்சோலைகளும் மனம் மகிழ்ந்து குளிர்ந்தன. அறிவுக்கு அறிவாய் அரசுக்கு அரசியாய் இருந்த நளனைக் கண்ட மக்கள் வணங்கினர். தான் ஏறிவந்த குதிரையை விட்டு, கீழே இறங்கி சோலையில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டார் நளன்.

பின்னர், அரசர்கள் எண்ணிலாதோர் முகமலர்ந்து நளனைச் சூழ்ந்து கொண்டு வணங்கினர். உயர்ந்த ஓடத்தின் மேலே, மணிகளால் அலங்கரிக்கப்பட்ட இருக்கையின் மீது அமர்ந்து கொண்டு, நள தனது பயணத்தை மேற்கொண்டார். அவர் செல்லும் வழி எங்கும், வாத்தியங்கள் முழங்க, மங்கலங்கள் உடன்வர பெண்கள் கண்டு மகிழ்ந்தனர்.

Scanned by CamScanner

வானவர்கள் மலர்மாரி வாழ்த்த, கண்ணும் நெஞ்சும் மலர பலரும் அவர் காலில் வீழ்ந்து வணங்கினர். இக்காட்சியைத் தன் கனவில் கண்டு எழுந்தாள் கதீஜா.

கனவு கண்ட கதீஜாவின் மனோநிலை!-

கனவு கண்டு எழுந்த கதீஜா பெரும்மதுநகனையும், அவரது படையையும் காணாது துயரமே உருவானாள். நபிகள்மீது கொண்ட காதலால் மனம் நைந்த, எவ்வித அணிகலன்களும் பூணார், தன் உடலினை பேணவில்லை. சந்தனம், குங்குமம் போன்ற நறுமணப் பொருள்களை பயன்படுத்தவில்லை. விழிக்கு மைதீட்டவில்லை. தனது பாதம் அணிகின்ற எந்தவொரு அணிகலன்களையும் அணியாதவளாக, துயரமே உருவாகியிருந்தாள்.

உண்ணவில்லை. நன்றாக உறங்கவில்லை. நபிகளை நான் மணப்பேன் என்று உறக்கத்து என்ற கனவின் உரியது நடக்குமோ? நடக்காதோ? என்றெண்ணி கதீஜா கவலையடைந்தாள். அப்பொழுது, மைசறா என்பவன் நபியின் ஓலை தாங்கி வந்தான்.

மன்னன் குவைலிதுவின் மகளான கதீஜா தன் துயரை உள்ளே அடக்கிக் கொண்டு, விரைந்து மைசறா தந்த கடிதத்தை வாங்கினாள். கடித முத்திரையை விலக்கி, நபிகள் எழுதியதைப் பார்த்த கதீஜா மனம் மகிழ்ந்தாள். கடல் வெள்ளத்தில் மாட்டிக் கொண்டோருக்கு உதவும் மரக்கலம் போன்று கதீஜாவுக்கு அக்கடிதம் நிறைந்த ஆறுதலைத் தந்தது. தான் உற்ற நோயிற்கு மருந்தான அக்கடிதத்தினை கதீஜா தன் தந்தை அபுத்தாலிக்கு (அரசர்க்கு) அனுப்பினாள். அக்கடிதம் படித்த அவள் தந்தையும், கதீஜாவும் சந்திரனைக் கண்ட அம்பல் மலர் போன்று அகமும், முகமும் மலர்ந்திருந்தனர்.

[illegible] :

1. [illegible]புராணம் - [illegible]

2. [illegible] வரலாறு

3. [illegible] வரலாறு

— x —

## 2. இரட்சணிய யாத்திரிகம்

- எச். ஏ. கிருட்டிணபிள்ளை

ஆங்கிலத்தின் ஜான்பனியன் எழுதிய நூலின் தழுவலே இந்நூல். 'புனிதப் பயணிகளின் முன்னேற்றம்', மோட்சப்பிரயாணம் ஆகியவற்றைத் தழுவி எழுதப்பட்டது. செய்யுள் நடையிலானது. கம்ப இராமாயணம், தண்டியலங் தமிழ் மரபைப் பின்பற்றுவது. 5 பருவங்கள் கொண்டது. ஆதிபருவம், குமார பருவம், நிதானபருவம், ஆரணியபருவம் என்பதாகும். மொத்தம் 3,622 பாடல்களும் 144 யாத்திரிக தேவாரங்களும் கொண்டது. கி.பி. 1894-ல் கிறித்துவ இலக்கிய சங்கம் வெளியிட்டது. இவர் போற்றி திருஅகவல், இரட்சணிய மனோகரம் என்ற நூல்களையும் எழுதியுள்ளார். 'நற்போதகம்' என்ற இதழில் 13 ஆண்டுகள் இக்கதை தொடராக வெளிவந்தது. 'கிறித்துவக் கம்பர்' என்றழைக்கப்படுகிறார்.

காட்சிப்படலம் :-

உண்மையான அருள் உள்ளத்தோடு இறைவனை வணங்கினான். அவன் இறந்தபின் செல்லும் வானுலகம் எத்தனை பேரின்பங்கள் கொண்டதாக இருக்கும் என்பதை 'கிறித்தியான்' என்ற அடியவர் மூலமாக ஆசிரியர் விளக்குகிறார். கிறித்தியான் என்பவன் வானுலகம் செல்லும் வழியில் ஒரு அழகிய மாளிகையில் தங்குகிறான். அவனுக்கு பத்தி, யூகி, விவேகி, சிநேகி என்ற நான்கு பெண்கள் இயேசுவின் அற்புதங்களையும், புதுமையான செயல்களையும் எடுத்துக் கூறுகின்றனர். வானுலகம் செல்வதற்கான வழியில் கண்ட காட்சிகளை கிறித்தியானுக்கு விளக்கிச் சொல்கின்றனர். இதுவே காட்சிப் படலமாகும்.

Scanned by CamScanner

வழியடைக் காட்சிகளை விளக்குதல்:-

எழில் மாளிகையில் தங்கிய கிறித்தியானிடம் அந்த பக்தி, புத்தி, சாவேகி, நிதேசி ஆகிய நான்கு பெண்களும் இறைவன் வீற்றிருக்கும் இவ்வுலகம் அனைத்தையுமானது. அவருடைய அன்பும், அருளும் கிடைக்கப் பெற்றோர் இங்கிருந்து வேறிடம் செல்ல விரும்பமாட்டார்கள் நீ இந்நாளில் இங்கேயே தங்கிச் செல் என்றனர் நாங்கள் உனக்கு அனைத்தையுமான காட்சிகளையும், இருப்பிடங்களையும் காட்டுகிறோம் என்று கூறினர்.

நான்நிலையம்:-

விண்ணுலகம் செல்லும் வழியில் இருந்த ஒரு நான்நிலையத்திற்கு பெண்கள் கிறித்தியானை அழைத்துச் சென்றனர். இறையருளும், மெய்யறிவும், அன்பையும் அறிந்து கொள்ள உதவும் நான்நிலையம் இது. அந்நான்கு பெண்களில் ஒவ்வொருவரும் இதைப்பற்றிய ஒரு கருத்தைக் கூறுகின்றனர். அவை,

குற்றம் செய்தோரை மீட்ட இறைவன் அவர்களை இம்மாளிகையில் புகச் செய்வார். விண்ணுலக மன்னனின் கட்டளையால் அவர்கள் கொல்லப்படாமல், எரியும் நெருப்பிலிருந்து தப்பிப் பிழைப்பர். வானமே மாறினாலும் பூமி மாறினாலும் நடப்பது நடந்தே தீரும். கீழ்மக்கள் தன் தவறை உணர்ந்து நெருப்பிலே வாழ முயன்றால், அவர்களை இயேசு மீட்பார். முன்பு இயேசுவுக்காக இலாத்திமர், ரிட்லே என்பவர்கள் நெருப்பிலே எரிக்கப்பட்டபோது, அவர்களைக் காத்து அருளியவர் எம் இறைவன் என்றனர். இதைக் கேட்ட கிறித்தியான், புதுமை, நற்பண்பு, மீட்பு, போன்ற பல்வேறு குணங்கள் கொண்ட நீங்கள் கூறிய சொற்கள் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்று கூறி, எழில் மாளிகையில் இரவு தங்கினான். பின்பு

Scanned by CamScanner

ஆயுதமண்டபம் காணல் !-

அடுத்ததாக, பத்தி என்பவள் ஆயுதமண்டபத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கே காலமாகிய சூரியன் சுழலுகின்ற வட்டவடிவமான அறச்சக்கர ஆயுதம். இதுவே என்பதைக் காட்டினாள். மக்கள் குற்றம் செய்யும்போது அவர்களைத் தடுத்து நிறுத்தி, மீட்கும் மீட்பாகிய கயிறு இதுவே என்று மீட்புக்கயிற்றைக் காட்டினாள். ஒருமுறை இயேசு பெருமான் உண்ணா நோன்பு இருந்தபோது, அவருக்கு இடையூறாக இருந்த கூர்மையான பட்டய ஆயுதத்தையும் காட்டினாள். அடியவர்கள் வழிதவறி நடக்கும் போது தீமையாகிய பாம்பின் தலையையும், கொடிய காமம் என்ற பேயையும் தலையைத் துண்டாக்கச் செய்யும் தண்டாயுதம் இதுவே என்றும் கூறினாள். மனம் தடுமாறி தீமை செய்ய முற்படும்போது, அம்மனத்தை தடுத்து நிறுத்தும் நாண் இந்த அம்பறாத்தூணியில் உள்ளது. இயேசுவிற்கு இடையூறாக வந்த வஞ்சனை, பொய் போன்ற பேய்களை 'சத்தியம்' என்ற இடைக்கச்சினால் தடுத்து நிறுத்துவார். அது இதுவே. ஏவாள் போன்ற பெண்களைத் தந்திரமாக வசப்படுத்தும் பேய் போன்றோரை சாகடிக்காமல், அவர்களை மீட்டுக் காக்கும் இரட்சணிய தலைக்கவசம் இதுதான் என்றும் கூறினாள். மேலும் பழி, நிந்தை, பொய் ஆகிய முள்ளாகிய தடியை உடைத்துக் காக்கும் மார்புக் கவசத்தையும், இயேசுவின் பாதரட்சைகளையும், மூன்று உலகங்களையும் காக்கும் இறைநம்பிக்கையாகிய கேடயத்தையும், கிறித்தியானுக்குக் காட்டினாள். சாத்தான் ஆட்சியை அழித்து இறையாட்சியை நிலைநிறுத்த அங்கே வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் ~~த~~ இருப்பிடமே 'படைவீடு' என்றும், அதற்கான தலைக்கருவி உன்னைப் போன்ற அடியார்களே என்றும், வானத்து விண்மீன் போன்ற எண்ணற்ற கிறித்து அடியார்களது நல்வாழ்வையே எப்பொழுதும் வெற்றியை ஈட்டித் தரும் என்றுரைத்தாள்.

Scanned by CamScanner

இவை தவிர, ஒப்பற்ற இறைத்தூதன் மோசே முன்பு எகிப்து மன்னன் இழைத்த துன்பங்களை நீக்க, இறைவனிடமிருந்து பெற்ற 'கோல்' ஆதாரம் 'எரிகோ' என்ற நகரமதின் இடியக் காரணமாக 'எக்காளம்' என்ற ஆயுதம், சம்கார் என்பவன் பெலிஸ்தியர் என்ற பகைவன் மற்றும் அவனது 600 வீரர்களை அழித்த தாற்றுக்கோல், 'யாகேல்' என்ற பெண் பகைவரின் தலையில் அடித்த ஆணி, இஸ்ரவேல் 'மீதியான்' என்பவனை அழித்த பந்தம், பகைவரை வென்ற போருக்குதவிய கழுதையின் தாடையெலும்பு, தாவீது என்ற சிறுவன் பெலிஸ்தியர் என்ற பகைவரை புறங்காட்டி ஓடச் செய்ததோடு, கோலியாத் என்பவனை தன் கவண்கல் கற்களை எறிந்து கொன்ற 'கவண்' இயேசுவின் இறந்தநாள் மீட்கப்பட்ட ஆதி அடியார்களை அழிக்கும் நெருப்புப்பட்டயம் இவையாவும் இம்மண்டபத்தை உருவாக்கிய வேந்தனின் செயலே என்று பத்தி கூறுகிறாள். இவையாவற்றையும் கேட்ட கிறித்தியான் அவர் காட்டிய வழியில் சென்ற இவை உதவும் என்றும், அவரை எதிர்க்கத் துணிவார் யார்? என்றும், இவையே நம் ஆத்மாவைக் காப்பதோடு, இயேசுவின் புகழை பாடும் என்றும் கூறுகிறான்.

மலைக்காட்சி :-

பின்னர், அனைவரும் அவரவர் இருப்பிடம் சென்றனர். மறுநாள் காலை மலையின் உச்சியிலிருந்து மண்டபத்தை அடைந்தனர். மலையின் தன்மை பற்றி பத்தி பின்வருமாறு கூறுகிறாள். மக்களின் இன்பமே மலை. காமம், வெகுளி, மயக்கம் ஆன திராட்சைகள். நல்ல அறுவடையே பயிரை வளர்க்க இயேசுவின் அருள்மழை உதவும். வானத்திலிருந்தே, புனிதமான இறைத்தூதர்கள். மலையின் அருவிகள், அதிலிருந்து பெருகி ஓடும் ஆறு இறையின் அருள். அசுத்த உணர்வுகளை அழிக்கும் மலை ஊற்று என

என அனைத்தையும் காட்டினாள். இங்கு ஒரே நீர்த்துறையில் மானும், புலியும் நீரைக் குடிக்கும். யானையும், சிங்கமும் தேனடையையும், பழச்சாறையும் ஒன்று சேர்ந்து உண்ணும். சிறுயார்களைக் கொல்லும் ஓநாய்க்கூட்டம், செம்மறியாட்டுடன் உறவு கொள்ளும். சிங்கம் ஆடு, பசுவுடன் இணைந்து புல்லைத் தின்னும். ஆயர்குலக் குழந்தைகள் புற்றுப் பாம்புடன் விளையாடுவர். செம்மறியாடுகள் சோலையில் மேயும். ஆடவரும், பெண்களும் தவ வாழ்வு வாழ்வர். முன்பொருநாள் இசுரவேல் என்பாருக்கு உணவு தந்தது இம்மலையின் வெண் மழையே. மழை வளத்தால் செந்நெற்பயிர் குவிய, மலைக்குரங்குகள் பட்பளாவை தின்று விளையாட, மலர்ச்சோலைகளும், குயில்களும் கூவ, இங்கு விளையும் சுவைமிக்க திராட்சைப்பழங்கள் அடியவரின் நற்செயலை ஒத்திருந்தன. இங்கு உண்மை, ஒழுக்கம், தவம், அமைதி, நல்லறம், இரக்கம், மகிழ்ச்சி இவையே மாடவீதிகளாகின. இத்தகைய பகுதிகளை இயேசுவே காக்கிறார். இது உள்ளங்கை நெல்லிக் கனியெனத் தெரிகிறது என்று கூறினாள்.

இதைக் கேட்ட கிறித்தியான் நீ கூறிய கருத்துக்கள் யாவும் சொல்வதற்கு அரிய புகழை உடையன, என்று கூறினான். பின்னர் அவன் விண்ணுலகப் பயணம் செல்ல ஆயுதங்களை அவன் அணியத் தருகின்றனர். அவன் உண்பதற்கு அப்பமும், திராட்சைரசத்தையும் தருகின்றனர். கிறித்தியான் அவர்களுக்கு வாழ்த்தும் நன்றியும் சொல்லிக் கொண்டு விடைபெறுகின்றான். அழகுமாளிகைக் காவலனிடம் வழி கேட்க, அவன் 'நிதானி' என்பவன் முன்பு சென்ற வழியைக் காட்டுகிறான்.

Scanned by CamScanner

அந்நான்கு பெண்களும் உங்களை உடன்.
பார்க்கிறோம். உள்ளத்தால் பிரியவில்லை
என்று கூறுகின்றனர். தலைசிறந்த இந்த பெண்களின்
பண்பும், நற்செயலும் நனவாக நடப்பது போல
உள்ளதே என்றும், இது எந்நாளும் தொடர
வேண்டும். கனவு மெய்ப்பட வேண்டும் என்றும்
தான் கடவுளை வேண்டுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

—x—

முற்றும்.

பயிற்சி வினாக்கள் :-

1. இரட்சணிய யாத்திரிகம் நூல், மற்றும் ஆசிரியர் குறிப்பு வரைக.
2. கிறித்தியான் கண்ட நூல் நிலையக் காட்சியை விவரி.
3. எழில் மாளிகையின் ஆயுத மண்டபத்திலிருந்த ஆயுதங்கள் எவையெவை? அதன் பயன்களை விளக்கு.
4. கிறித்தியான் மகிழ்ந்த மனையின் காட்சிகளை விவரி.
5. இரட்சணிய யாத்திரிகம் 'காட்சிப்படலம்' ஒரு கட்டுரை வரைக.

—x—

Scanned by CamScanner